DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 5/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : கருப்பசாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது ராமசாமியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ராமசாமியாபுரத்தில் உள்ள காளியம்மன் கோவிலுக்கு முன்பு வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்து கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**நீதிமன்ற விசாரணை**

15.10.2012 ம் தேதி இரவு 11.30 மணிக்கு சின்னகோவிலான்குளம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் அந்த காவல் நிலையக்குற்ற எண்.233/2012 ச/பி.294(பி), 323, 506(2) இதச வழக்கில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் என் முன்புக்கும், மிக்கேல்ராஜ் என்பவர் முன்புக்கும் சார்ஜர் லைட் வெளிச்சத்திலும், தெருவிளக்கு வெளிச்சத்திலும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், அதில் நானும், மிக்கேல்ராஜ்ம் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை .**